மாணவர்களிடையே அமைதியின்மை இருந்து வருவது பற்றி, 27—7—77 அன்று கல்லூரி முதல்வர்கள் மாணவர்கள் பிரதிநிதிகள், கல்லூரி கல்வி இயக்குநர் ஆகியவர்கள் அடங்கிய கூட்டம் நடந்தது. அதில் மாணவர்கள் தங்களுடைய குறைகளை அரசிடமும், சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களிடமும் எடுத்துக் கூறி பரிகாரம் காணலாமென்றும் இதுமாதிரியான வேலைநிறுத்தம், ஊர்வலம் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவேண்டாமென்றும், மாணவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. மாணவர்களும் இனிமேல் இது மாதிரி நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டோம் என உறுதி கூறியுள்ளார்கள்.

எனவே, இதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லையென்ற காரணத்தினுல் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

(3) அரசினர் தீர்மானம்:

விதி 41(3)—ஐத் தளர்த்தல்:

மாண்புமிகு திரு கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

'தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41(3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட பொருள்களை கவன ஈர்ப்புக்கு கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்தவேண்டும்.'

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(4) தகவல் கோரல்.

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் குறித்து.

திரு. சி. கோவிந்தராசன்: தலைவர் அவர்களே, நெல்லிக்குப்பத்திலே நடந்த சம்பவம் சம்பந்தமாக நேற்றுக் காலை ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வராத காரணத்தால் இன்றைக்கு

[திரு .சி. கோவிந்தராசன்] [1977 ஆகஸ்டு 2

எடுத்துக் கொள்ளப்படவில்லை. அங்கே போலீஸ் கெடுபிடி அதிகமாக இருக்கிறது, கட்சிப் பாகுபாடு இல்லாமல் சகட்டு மேனிக்கு அடிக்கப்படுவதாக இன்று காலைகூட தகவல் வந்திருக்கிறது. நாளைக்கு எடுத்துக் கொண்டாலும் சரி........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என்று சொன்னேன். ஆனால் நீங்கள் இங்கே அத்தனையையும் சொல்லிவிட்டு எழுப்பியிருக்கிறீர்கள். முதலமைச்சர் வேண்டுகோளுக்கிணங்க நாளைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. துரை கலியமூர்த்தி: தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருக்கிறது என்று......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அமருங்கள். அறைக்கே வந்து கேளுங்கள், சொல்கிறேன். எல்லாவற்றையும் இங்கேயே எழுப்பிக் கொண்டிருந்தால் என்னிடத்திலே கொடுக்கவேண்டிய அவசியமே இல்லையே.

(5) கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் புகையிலை உற்பத்தி செய்து விற்க முடியாமல் அவதியுறும் விவசாயிகள் நிலை குறித்து.

*திரு. மா. மீனாட்சி சுந்தரம்: தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ''தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் பகுதியில் சுமார் 2 கோடி ரூபாய் புகையிலை உற்பத்தி செய்து விற்க முடியாமல் சுமார் 5 ஆயிரம் விவசாயிகள் அவதிப்படுவதாலும், வேதாரண்யம் புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்திடம் போதிய பணம் இல்லாததால் கொள்முதல் செய்ய முடியாத நிலையில் மேற்படி சங்கத்திற்கு குடந்தை மத்திய வங்கியிலிருந்து போதிய பணம் கொடுத்து புகையிலை கொள்முதல் செய்வது குறித்து''.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, வேதாரண்யம் பகுதியில் 5,600 புகையிலை பயிரிடுவோர்கள் உள்ளனர். சுமார் 1,800 ஏக்கர் நிலத்தில் 14.40 இலட்சம் கிலோ கிராம் மெல்லும் புகையிலை உற்பத்தி செய்யப்படுகிறது. வேதாரண்யம் புகையிலை பயிரிடுவோர் கூட்டுறவு விற்பனை சங்கம் 1973-ல் தொடங்கப்பட்டு 1974-ல் புகை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS